# தமிழரின் வழிபாட்டு மரபில் பல்லவர்கள் ஏற்படுத்திய தாக்கமும் புதிய கலைக் கோட்பாடும்

**முனைவர் அ. மரிய செபாஸ்தியான்**
உதவிப் பேராசிரியர் (தமிழ்)
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி பல்கலைக்கழகம்
வேலூர்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

மரங்களை வழிபட்டும், சுதையுருவங்களையும், இறந்துபோன போர் வீரனின் நினைவாக, அல்லது தாம் வாழும் குழுவிற்காக உயிர் துறந்தோரின் நினைவாக நடப்பட்ட நடுகல்லையும் வழிபட்டுவந்த தமிழரது வழிபாட்டு மரபில் பல்லவர்கள் ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது. கல் எனும் நினைவுச் சின்னம் தமிழருக்கு ஈமச்சடங்கோடு தொடர்புடைய ஒன்றாகவே இருந்து வந்ததைச் சங்கப் பனுவல் மூலம் பெறக்கூடிய முக்கியமான தகவலாகும். ஈமச்சடங்கில் மட்டும் பயன்பட்ட கல் எனும் ஊடகம் எவ்விதம் வழிபாட்டிற்குறியதாக மாற்றம்பெற்றது என்பது இங்கு ஆய்விற்குரிய ஒன்றாகும். கல் எனும் ஊடகம் புடைப்பு சிற்பத்திற்கும், ஒருவரது வீரத்தைப் புகழ் பாடும் செய்தியை வெளிக்காட்டும் விதமாகவும் இறப்புச் சடங்கில் (மட்டும்) தொடர்புடைய நடுகல் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றம் ஒரு சமூகத்தின் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதவேண்டி உள்ளது.

**நடுகல்**

போரில் பட்டோருக்கு எடுக்கும் கல் - போரில் இறந்த வீரரின் உருவமும், பெயரும், பீடும் எழுதி அவரைப் புதைத்தவிடத்தே நடும் சிலை.

**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்**
**பொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப் - (அகம் 309:4-5)**

தெய்வம் தங்கிய பரிய அரையினையுடைய வேப்ப மரத்தடியில் கொழுப்பினை உடைய பசுவினை அடித்துப் பலிகொடுத்த செய்தியின் வழி வேப்ப மரமானது வழிபாட்டிற்குறியதாக இருந்தமை புலப்படுகிறது.

**மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி – ஐங்குறு – (259:2-3)**

மன்றத்தின் கண்ணிற்கின்ற வேங்கை மலர் சிலவற்றைக் கொய்து மலைதோறும் எழுந்தருளியிருக்கிற இறைவனாகிய தம் குலதெய்வத்தை வணங்கும் தலைவியைச் சுட்டிகாட்டுமிடத்து குலதெய்வ வழிபாடு சுட்டிக்காட்டப்படுகின்றது. சிற்றூரின் கண் அரிவை, நடுகல்லில் செம்மறிக் குட்டியைப் பலிகொடுத்தனர். (அக:53:8)

போரினை வென்றுபட்ட மானம்மிக்க கரந்தை வீரரது பெயரினையும், சிறப்பினையும் பொறித்து, நெறிதோறும் பீலி சூட்டிய நடுகல்லானைவை, ஊன்றிய வேலும், சார்த்திய பலகையும். கொண்டு பகைபுலத்தை ஒத்துத் தோன்றின (அக-131-11). உயிர் நீத்தலின், நிலை பெற்ற நடுகல்லானவிடத்தும், பழையதாகிய நட்பையுடையோர். நம்மிடத்தே செல்லின், நிச்சயமாக இடங்கொடுத்தளிப்பார் எனக் கல்லாகியும் இடம்கொடுத்த கோப்பெருஞ் சோழனை வடக்கிருந்த (புறம்-223-3) பொத்தியார் பாடும் பாடலில் நடுகல் எழுப்பியது குறிப்பிடப்படுகின்றது. மேலும் புறம் 232, 261 வது பாடல்களிலும் நடுகல் பற்றிய குறிப்பைக் காணலாம். சிற்றூர் பக்கத்தே நடப்பட்ட நடுகல்லுக்கு விடியற்காலத்துப் பலியைப் படைத்து நல்ல நீரையாட்டி நெய்விளக்கேற்றிய செய்தி, புறம் 329 ஆம் பாடலில் காணக்கிடைக்கின்றது.

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லேன்று (அகம்-167:13-15)**

என்ற அகநானூற்றுப் பாடலில் செங்கலால் கட்டப்பட்ட சுவரில் எழுதப்பெற்ற அழகிய கடவுள் உருவம் குறித்த செய்தியில் இரண்டு தரவுகள் கிடைக்கின்றன. செங்கலால் கட்டப்பட்ட சுவரில் கடவுள் உரு (செதுக்கப்படவில்லை) எழுதப்பெற்றுள்ளது என்பதன் வாயிலாக வரையப்பட்ட கடவுள் உருவைக் கொண்ட மாடத்துச் சுவர் குறிக்கப்பெற்றுள்ளது.

நிறுவன அமைப்பு பெற்ற இந்து, சமண, பௌத்த சமயங்கள் அவை வளரத் தொடங்கிய காலத்தில் விந்திய மலைக்கு அப்பால் தென் தீபகற்பப் பகுதியில் மலைகளையும் காடுகளையும் கடந்து, தெற்கிலே இருந்த, நல்ல பண்பாடும் சமூக அமைப்பும், மரபும் தமக்கேயுரிய நம்பிக்கைகளும் கொண்ட சமயங்களும் தம்முடைய ஆற்றலாலே இரண்டறக் கலந்தன" (பக் 2, தென்னிந்தியக் கோயில்கள்). காலத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் விரைவில் நலியும் தன்மைகொண்ட அவை மாறி, கருங்கல்லிலும் பின்பற்றப்பட்டன (பக் 2, தென்னிந்தியக் கோயில்கள்) குடைவரைக் கோயில் - ஒரேகல்லில் ஆன கோயில், முழுவதும் கல்லாலான கோயில் என படிப்படியாகக் கல் என்ற ஊடகத்தின் வளர்ச்சி முன்னேறத் தொடங்கியது. ஆனாலும் பழமையானதும் நன்கு ஆழமாக வேரோடியதுமான மர வழிபாட்டுமுறை தென்னந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் தொடர்ந்து வந்துள்ளது. (பக் 9, தென்னிந்தியக் கோயில்கள்)

சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்குமிடையே இருந்த தொடர்பு, தமிழக வழிபாட்டு மரபில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது வடக்கே பரவியிருந்த பௌத்த, சமண மரபுகள் தனக்கென தனித்துவமான குடைவரைக் கோயில் மரபைக்கொண்டிருந்தன. அதன் தாகம் பல்லவர்களுக்குப் புதியதொரு கலைவடிவத்தை முயற்சித்துப் பார்க்கத்தூண்டியது. அதன் வெளிப்பாடாகத் தமிழகத்தில் விழுப்புரத்திற்கு அருகில் உள்ள மண்டகப்பட்டு எனுமிடத்தில் சோதனை முறையில் உருவாக்கப்பட்ட முதல் குடைவரைக் கோயில் அதுவரை இருந்த வழிபாட்டு முறையை மாற்றி அமைக்கத் தொடங்கியது. உயிரோடு இருந்து மறைந்த போர் வீரனுக்கு எழுப்பப்பட்ட நடுகலின் புடைப்பு சிற்பக்கலையில் பல்லவர் காலத்தில் வடநாட்டில் புராணத்தை அடிப்படையாகக்கொண்ட இந்து கடவுள்களின் உருவங்கள் இடம்பெறலாயின. சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் பாறைகளுக்கும் இடையேயான உறவு, தமிழருக்கும் கல்லிற்குமான உறவீற்கு நேரெதிர் என்பது இங்குக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

முதன்முறையாக கல் எனும் ஊடகத்தைக் கோயில் அமைக்க எதிர்கொண்ட சிக்கல், புதிய நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ளும் நிலைக்குக் கலையில் புதிய முன்னெடுப்பைக் கொடுத்தது. நடுகல் என்ற அமைப்பிலிருந்த மேற்கூரை அற்ற தமிழரின் வழிபாட்டு தளம், புதிய வடிவத்தை நோக்கி நகர்ந்தது. மண்டகப்பட்டில் உயர்ந்து நிற்கும் தூண்களுடன் (சதுரமாக, எண்கோண) வடிவமைப்பு கலை உருவானது. அடுத்ததாக தாமரை மலர் மீதும், சிங்கத்தின் மீதும் மற்றும் யாளியின் மீதும் நிற்கும் தூண்கள் புதிய வடிவங்களுக்கான களங்களாயின மண்டகப்பட்டில் உள்ள

பல்லவர்களது குடைவரைக் கோயில் கட்டுமானத்தில் தூண்களும் உள்ளே குடையப்பட்ட நிலையியல் சோதனை முறையில் முயற்சித்துப் பார்த்த அளவீடுகளும் மாமல்லபுர சிற்பங்கள் வடிவமைப்பதற்கான முன்னோட்டமாக அமைந்துள்ளன.

முதலாம் மகேந்திரவர்மன், இந்து சமயக் கடவுளர் சிவன் - விஷ்ணு – பிரம்மா என்ற மும்மூர்த்திகளுக்கும் உரியதாகத் தன்னுடைய முதல் குகைக் கோயிலைத் தென்னார்காடு மாவட்டம் மண்டகப்பட்டு எனுமிடத்தில் எடுப்பித்தான். (பக். 37, தென்னிந்தியக் கோயில்கள்)

**மண்டகப்பட்டு**

கல் எனும் ஊடகம் ஏற்படுத்திய தாக்கம் சிற்பக்கலையில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது. நடுகல்லில் புலிகுத்திக் கல்லாய் நின்றிருந்த வீரனின் உருவம் கல்லில் திருத்தத்துடன் தனிப்பெரும் கலக் கோட்பாடாக உருவெடுத்தது. நடுகல் என்ற கட்டமைப்பிற்குள் உருவான கோட்பாடு கல் எனும் ஊடகத்தில் புதிய கோட்பாட்டுருவாக்கதிற்கு அடிகோலிட்டது. கற்களின் மீது தீராத காதல் பல்லவர்களுக்கு இருந்தது. பாண்டியர், சோழர்களுக்கு புதியதொரு கலைப்போக்கு பல்லவர்களால் கிடைக்கப்பெற்றது. ஒரு சிலையைப் பல கூறுகளாகப் பிரிக்க உருவாக்கபட்ட அளவீடுகள் தமிழரின் சிற்பக்கலைக்குப் புதிய வடிவங்களைக் கொடுத்தது. குடைவரை, கற்களை ஒன்றன் மீத ஒன்றாக அடுக்கி வைத்துக் கட்டப்படும் (தற்போதைய கோயில் கட்டமைப்பு) முறை, ஒற்றைக் கற்றளி (ஒரே கல்லில் உருவாக்கப்படும் கோயில்) வகைகளானது தமிழருக்குக் கிடைத்த புதிய வடிவங்களாகும். மண்டகப்பட்டில் தொடங்கிய பல்லவர்களது கோயில் கட்டுமானத்தின் பயணமானது, மகாபல்லிபுரத்தில் புதியபுதிய வடிவங்களில் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு அங்கோன்வாட்டில் உச்சத்தைத் தொட்டது. பல்லவர்களுக்குக் கோயில் கலையே ஆணிவேர் என்பது அவர்கள் கட்டமைத்த கோயில்களே சான்று. பல்லவர்களது காலத்திற்குப் பின்பே சோழர்களும் பாண்டியர்களும் கோயிலைத் திருத்தமாகச் செய்தனர். சோழர்களது கட்டிடக் கலையின் உச்சம் தஞ்சை பெருவுடையார் கோயில் என்றால் பல்லவர்களது கட்டிடக்கலையின் உச்சம் மகாபலிபுரம், அங்கோன்வாட் கோயில்களை எ'ஊஊஏ3

**தூண்**

பல்லவர்களின் கலை வடிவங்களில் ஒன்றான தூண்களின் அமைப்பு வடிவங்களில் ஏற்பட்ட புத்தெழுச்சி சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் தங்களுக்கெனத் தனி கலைவடிவத்தை உருவாக்கிகொள்ளத் தூண்டியது. தூண்களின் வடிவத்தில் எற்பட்ட சோதனை முயற்சியானது முதலில் சதுர வடிவில் இருந்தே ஆரம்பித்தது. இயற்கையின் வடிவமைப்பான வட்டம் என்ற அமைப்பிலிருந்து குறிப்பிட்ட எல்லை வகுக்கும் சதுர அமைப்பு சமமான ஒரு தளத்தை வரைவதற்கும், வரைந்ததைச் செதுக்கிப் பார்க்கவும் ஏதுவாக அமைந்தது. மண்டகப்பட்டில் அமைந்த குடைவரைக் கோயிலில் சதுர வடிவில் செதுக்கப்பட்ட தூண் ஆரம்பகட்ட கலை வடிவமாக இருந்து பின்பு எண் கோணம், தாமரை மலர்மீதும், சிங்கத்தின் தலையின் மீதும், யாளியின் மீது வடிவமைக்கப்பட்ட தூண்கள் பல்லவர்களுக்கான கலை வடிவமாக உருவானது. மண்டகப்பட்டில் தொடங்கி மாமல்லையில் புது வடிவம் பெற்று அங்கோன் வாட்டில் காலத்தை வென்று “பல்லவர்களுக்கான தூண்” என்ற பெருமையை உலகிற்கு அறிவித்தபடி நின்றுகொண்டிருக்கின்றது.

**மாமல்லபுரம்**

தமிழரின் வழிபாட்டு முறையில் கற்கோயில் ஏற்படுத்திய மாற்றம் முக்கியமானது. தனது குழுவிற்காக உயிர்த்தியாகம் பல்லவர்களது காலத்தில் புராணக் கடவுள்களின் திருவுருவங்கள் தனதாக்கிக் கொண்டன. புராணக் கதையை காட்சிப்படுத்தும் போக்கு மாமல்லன் பாணி என அழைக்கப்பட்டதிலிருந்தே உணர்ந்துகொள்ளலாம். ஆயினும் மாமல்லையில் புராணம் சார்ந்த, புராணம் சாராத சிற்பம் என வகைப்படுத்திப் பார்க்க முடியும்.

பல்லவர்கள் இந்து புராணக் கதைகளைத் தமிழகத்தோடு இணைக்கத் தங்களது சிற்பக்கலையின் வாயிலாகக் "காட்சிபடுத்தல்" என்ற நிலைத்த தன்மையைப் பயன்படுத்திக்கொண்டனர். பிரம்மா. விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுள்களுக்கும் முதன்முதலில் ஒன்றாகக் கோயில் எழுப்பி புதிய நடைமுறையைத் தோற்றுவித்தது பல்லவர்களே.

மகேந்திரவர்மன் காலகட்டத்தில் (கி.பி. 600-630) எழுப்பப்பட்ட வாயில் காப்போன் படைப்பு சிற்பங்கள் மாண்டூர் குடைவரைக் கோயிலில் காணலாம். முதலாம் நரசிம்மவர்மன் காலகட்டத்தில் (கி.பி. 630 – 668) உருவாக்கப்பட்ட குடைவரைக் கோயிலில் அமைந்த "மண்டபச் சுவர்களில்" அழகிய சிற்பங்களும், சிற்பத்தொகுதிகளும் புடைப்பு உருவங்களாகச் செதுக்கப்பட்டன. மகிடாசுரமர்த்தினி, சங்கப் பாடல்களைக் காட்சிபடுத்தும் கோவர்த்தன மலையைத் தாங்கி நிற்கும் கண்ணனின் திருவுருவம் (கோவர்த்தனதாரி), அரணையில் துயில் கொள்ளும் அனந்த சாயி, பூவராக மூர்த்தி திரு உருவம், திறந்த வெளியில் உருவாக்கப்பட்ட பாறை சிற்பமான பகீரதன் தவம் அல்லது அர்சுனன் தபசு சிற்பத் தொகுதி, எருமைத்தலைப் பூதகணங்கள், வராகர், திருமகள், திரிவிக்கிரமன், தேவலோக கருத்துருவாக்கங்கள், கின்னர், கிம்புருடர், கந்தர்வர், இடபன், பீம, தர்மராஜ ரதம், சகாதேவர், ஐராவதம். யானை, இந்திரன், துர்கை, முப்புரிநூல் அணிவிக்கபட்ட முருகன் திரு உருவம் எனப் புராணத்தைக் காட்சிபடுத்திய மாமல்லபுர சிற்பங்கள் கட்டமைக்கப்பட்டு புராணக் கதைகளைக் காட்சிப்படுத்தும் போக்கு தீவிரமாக்கப்பட்டது என்பது விளங்கும்.

**கோயில் கட்டுமானமுறை**

பல்லவர்களது கோயில் கட்டுமான முறையில் புதிய சோதனை முயற்சிகள் செய்துபார்க்கப்பட்டன. மண்டகப்பட்டில் அரைவட்ட வடிவில் முயற்சிக்கப்பட்ட வடிவம் முதலாம் மகேந்திரவர்மன் காலகட்டத்தில் ஒற்றைக்கல்லை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கி உருவாக்கும் ரதம் எனும் வடிவத்தின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய கட்டுமான அளவீடுகள் புதிய கற்றளியை ஏற்படுத்தின. ரதம் எனும் கோயில் வடிவம்தான் பிற்காலக் கோயிலுக்கான முன்னமாதிரியாக இருந்தது. கோயிலின் மேல்தளமான விமானம் எனும் பகுதி உருப்பெற்றதுடன் பல்லவர்களது காலத்தில் புதிய வடிவங்களில் சோதனைசெய்து பார்த்தனர். ஒவ்வொரு ரதக் கோயிலும் கருவறை, அதற்கு வெளியே வாயிலின் இருபக்கமும் வாயிற்காப்போன் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கு நோக்கி அமைந்த தர்மராஜ ரதக் கோயிலில் மூன்று தளங்கள் உண்டு. ஒவ்வொரு தளங்களிலும் நரசிம்ம பல்லவனின் சிற்பம் உட்பட பல்வேறு சிற்பங்கள் காணப்படுகின்றன. பீம ரதக் கோயிலானது நீண்ட சதுரமான அமைப்பைக் கொண்டிருக்கிறது. நீண்ட சதுர வடிவப் பாறைக்கு ஏற்றபடி இக்கோயிலின் விமானமானது கிடைமட்டமாக நீண்டு காணப்படுகின்றது. இக்கோயிலானது சதுர அமைப்புடைய இரண்டு நிலைமாடக் கோயில் வகையைச் சார்ந்தது. சிங்கங்களும் யானைகளும் சுமக்கும்படி இக்கோயிலானது சதுர அமைப்புடைய இரண்டு நிலைமாடக் கோயில் வகையச் சார்நதது, சிங்கங்களும் யானைகளும் சுமக்கும்படி இக்கோயிலின் கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ளது. கொற்றவைக்கு உரியதாக அமைக்கப்பட்ட சிங்க வாகனத்துடன் அமைக்கபட்ட திரௌபதை ரதமானது சிறு குடிசையின் அமைப்பை ஒத்துள்ளது. யானையின் பின்பகுதியை ஒத்த விமானத்தைக் (கஜபிருஷ்டம்) கொண்ட மூன்று நிலை மாடக்கோயிலாக விளங்கும் நகுல சகாதேவ இரதம் என அனைத்து ரதக் கோயில்களும் ஒன்றைப்போலவே ஒன்று இராதபடி புதிய வடிவமைப்பில் சோதனைசெய்து பார்த்த பல்லவர்களின் கலைப்பித்து நன்கு விளங்குகிறது.

இராஜசிம்ம பல்லவன் காலத்தில் எழுப்பப்பட்டதாக அறியப்படும் தமிழகத்தின் முதல் கட்டுமானக்கோயில் என்ற சிறப்புடைய கடற்கரை கோயில், வட்ட வடிவ (லிங்க வடிவ) சிவன் கோயில் என கோயிலின் வடிவங்களில் மாபெரும் புரட்சியைப் பல்லவர்கள் துவக்கி வைத்துள்ளனர். சிற்பக்கலையின் உச்சமாக இயங்கு சிற்பம் (சா. பாலுசாமி – புலிக்குகையும் கிருஷ்ண மண்டபமும்) கோவர்த்தனதாரி சிற்பத்தொகுதியைக் கூறலாம். இரண்டாகப் பிளவுற்ற அர்ச்சுனன் தபசு சிற்பத் தொகுதியில் அப்பிளவின் வழியே மழைக்கால நீர் வழியும்போது இமயமலையிலிருந்து வழியும்

கங்கையை ஒத்த காட்சி (இயங்கு சிற்பமாக) காணக்கிடைக்கும். அசையா கற்களைக்கொண்டு பலவிதக் கோயில் விமானங்கள், சிற்பத்தொகுதி மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக இயங்கு சிற்பம் எனக் கட்டடக் கலை வடிவங்கள் பல்லவர்களது காலத்தில் சோதிக்கப்பட்டு மாமல்லபுரக் கடற்கரையில் தனிப்பெரும் வரலாறாக நின்றுகொண்டிருக்கின்றன.

நன்றியுடன் வழிபாட்டிற்குரியோராக வணங்கப்படும் வீர வீராங்கனைகளின் தியாகங்கள், தமது மதிப்பு மிகு பயணத்தை நிறுத்திக்கொண்டு புராணக் கடவுள்களுக்கு இடம் கொடுத்து தனது வழிபாட்டுப் பயணத்தை மடைமாற்றிக்கொண்டன.

கம்போடியா பண்டைய தமிழரின் கடல் வழிப்பயணங்கள் உலக வரைபடத்தில் முடிவற்று நீண்டு கொண்டிருந்த காலகட்டத்தில் நாவாயோடு கலைகளும் கடல் தாண்டி பரவ ஆரம்பித்தன. பல்லவர்களும் சோழர்களும் தங்களது கடல்வழி அரசாட்சியை விரிவுபடுத்தத் தொடங்கியதும் புராணக்கதைகள் கடல் கடந்து செல்ல ஆரம்பித்தன. அவ்விதம் கடல் கடந்து சென்ற புராணக் கதைகளைக் சிற்பத் தொகுதிகளாய் கொண்ட உலகின் மிகப்பெரிய கோயிலான அங்கோன்வாட் சிறந்த எடுத்துக்காட்டாகும். மாமல்லபுரத்தில் கற்கோயில் வடிவமைப்பிற்கான அனைத்துச் சாத்தியக் கூறுகளையும் சோதித்த பின் வடிவம் பிரமாண்டம் மட்டுமே. அத்தகு பிரமாண்டத்தையே இரண்டாம் சூரியவர்மன் (கி.பி 1113-1160) கட்டியெழுப்பினான். விஷ்ணுவுக்காகக் கட்டப்பட்ட இந்த கோயிலானது மதச் சார்புடன் கட்டப்பட்ட கோயில்களில் மிகப்பெரியகோயிலாகும். சோழர்களின் கட்டடக் கலையை ஒத்த மேற்கு நோக்கிய பிரம்மாண்டமான இக்கோயிலானது புதிய சிற்ப வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றது. ஒன்றன்மீது ஒன்று அடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இக்கோயிலில் நீண்ட காதுகளையும், கம்போடிய இன மக்களின் முக அமைப்பை கொண்ட சிற்பங்கள் புதிய அளவீடுகளை வடிவமாகக் கொண்ருக்கின்றன. மஹாபாரதக் கதைகள், இராமாயணக் கதைகள் கம்போடிய சிற்பக்கலையினுடே தன்னை மாற்றிக்கொண்டு மாறுபட்ட புதுவடிவமைப்பில் இன்றும் புடைப்பச் சிற

இந்து மத புராண விலங்கான ஐராவதம் யானை மாமல்லபுரத்தில் செதுக்கப்படிருந்தது போல ஐந்து தலை நாகம் அங்கோன் வாட் கோயிலில் நிறுவப்பட்டுள்ளது. தூண்களின் வடிவில் கம்போடிய யானைகள் தங்கள் துதிக்கையால் தாங்கி நிற்கின்றன. மண்டகப்பட்டில் சதுர வடிவில் செதுக்கப்பட்ட தூண், இங்கு கற்களை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைத்து யானையின் தலையிலிருந்து கீழ் நோக்கி வரும் துதிக்கை, அத்துதிக்கையைத் தாங்கி நிற்கும் சிங்கம் என்ற கலை வடிவத்தில் காட்சி தருகின்றது.

தமிழரின் கோயில் கட்டுமானம் குறித்த கலை வடிவில் நடுகல்லில் இருந்து குடைவரை, கற்றளி, கற்கோயில் என தனது மாறுபட்ட வடிவங்களில் மாற்றம் பெற்று இறுதியாக உலகின் பிரமாண்ட கலை வடிவமாக நிமிர்ந்து நிற்கும் இக்கோயிலானது தமிழரின் வழிபாட்டு மரபின் மாற்றத்தைத் தன்னுள்ளே வைத்துக்கொண்டு அமைதியாய் நிற்கிறது.

**ஊசாத்துனை நூல்கள்**

1 அகநானுறு, கழக வெளியீடு, திருநெல்வேலி
2 ஐங்குநுறூறு, கழக வெளியீடு, திருநெல்வேலி
3 புறநானுறு– கழக வெளியீடு, திருநெல்வேலி
4 கே. ஆர். சீனிவாசன் - தென்னிந்திய கோயில்கள், நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி
5 சா. பாலுசாமி - புலிக்குகையும் கிருஷ்ண மண்டபமும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்